# சீர்காழி நகராட்சி



**2019 –ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19.12.2019 வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரனக் கூட்ட நடவடிக்கை.**

முன்னிலை.திரு.S. வசந்தன்.B.E.MBA.,
தனி அலுவலர் (ம) ஆணையர்(பொ)
சீர்காழி நகராட்சி.

<table>
<tr><td>பொ<br>ருள்<br>ண்-1</td><td>சீர்காழி நகராட்சி – நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களுக்கு இடையூராக சுற்றிதிரியூம் மாடுகளை உரிமையாளர்கள் பாதுகாப்பாக பராமரிக்கவும் வெளியில் திரியவிடக்கூடாது எனவும் மாடுகளை வளர்க்கும் உரிமையாளர்கள் பாதுகாப்பாக அடைத்து வைத்துக்கொள்ளுமாறு ஆட்டோ , மைக் விளம்பரம் 15.11.2019 முதல் 17.11.2019 வரை 3தினங்களுக்கு அனைத்து பகுதிகளிலும் விளம்பரம் செய்திட அவசரஅவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு15-ன்கீழ் திரு.எம்.ஆறுமுகம், சுமதி சவுண்டு சர்வீஸ் , திருகோலக்காதெரு , சீர்காழி என்ற உரிமையாளர்கள் மூலம் பணிகளை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(அ - கு)மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க. எண் : 6082/2012/எச்1)<br>நகர்மன்ற தீர்மான எண்–422 நாள்.19.12.2019. அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>பொ<br>ருள்<br>ண்-2</td><td>இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்-2019-20 ன்கீழ் சீர்காழி நகராட்சிக்குட்பட்ட சட்டநாதர் காலனியையும், புதிய போருந்து நிலையத்தையும் இணைக்கும் நடைபாலம் (Small Bridge) ரூ.7.00 (இலட்சம் மதிப்பீட்டில்) அமைக்கும் பணிக்கு 22.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட</th></tr>
<tr><td>1</td><td>T .சேஷாத்திரி,<br>7/4, ஸ்டேட் பாங்க் காலனி,<br>திருப்பாபூலியூர்,<br>கடலூர்.</td><td>(+) 0.31 %<br>(அதிகம்)</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ பவர் பண்டர்பிரைசஸ்<br>சென்னை.</td><td>(-) 0.08 %<br>(குறைவு)</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் –2ல் காணும் ஸ்ரீ பவர் பண்டர்பிரைசஸ் சென்னை. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 0.08% குறைவாக உள்ளதால் இதனை ஏற்று தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்-3621/2019/இ1)<br>நகர்மன்ற தீர்மான எண்–423 நாள்.19.12.2019. அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
</table>

**பொருள் எண்-3**

இந்நகராட்சியில் பொது நிதி திட்டம்-2019-2020 ன்கீழ் சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் கூடுதடல் உட்கட்டமைப்பு வசதி மற்றும் பர்னிச்சர்ஸ் விநியோகம் ரூ.8.00 (இலட்சம் மதிப்பீட்டில்) செய்யும் பணிக்கு பணி செய்திட 29.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|
| 1 | T .சேஷாத்திரி,<br>7/4, ஸ்டேட் பாங்க் காலனி, திருப்பாபூலியூர், கடலூர். | (+) 1.11 % (அதிகம்) |
| 2 | ஸ்ரீ பவர் பண்டர்பிரைசஸ் சென்னை. | (-) 0.08 % (குறைவு) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் –2ல் காணும் ஸ்ரீ பவர் பண்டர்பிரைசஸ் சென்னை. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 0.08% குறைவாக உள்ளதால் இதனை ஏற்று தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்-3621/2019/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்–424 நாள்.19.12.2019. அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்-4**

சீர்காழி நகராட்சியில் வறட்சி நிவாரண நிதி திட்டம் 2012–13 ன் கீழ் நகராட்சிக்கு உட்பட்ட PMR தெரு, புதிய பேருந்து நிலையம், தாடாளன் காமராஜபுரம், கோயில் பத்து பிள்ளையார் கோயில் தெரு, ஆகிய இடங்களில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின் விசை குடிநீர் தேக்கத்தொட்டி அமைக்கும் பணிக்கு 08.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.கே.செல்வம், ஒப்பந்ததாரர், சீர்காழி அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று 01.09.2015 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது முற்றிலும் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை வழங்கிட வேண்டியுள்ளது. இந்நகராட்சியின் வறட்சி நிதி திட்ட வங்கி கணக்கு எண்– பராமரிப்பு Close செய்யப்பட்டுள்ளது நடப்பாண்டில் பட்டியல் தொகை வழங்க வேண்டியுள்ளதால் மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்தில் ஒப்பந்ததாரருக்கு முதல் மற்றும் பகுதி பட்டியல் பிடித்தம் செய்யப்பட்ட தொகை போக ரூ.2,75,000/– வழங்கப்பட்டுள்ளது. எனவே தற்போது பணி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. கீழ் கண்டவாறு ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்க வேண்டியுள்ளது.

| வரிசை எண் | வழங்க வேண்டிய தொகை விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | கூடுதல் வைப்பு தொகை –1% | 4000.00 |
| 2 | காப்புத் தொகை– 5% | 20000.00 |
| 3 | பிடித்தம் செய்யப்பட்ட தொகை | 19188.00 |
| 4 | ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய பட்டியல் தொகை | 85000.00 |
| | கூடுதல் | 128188.00 |

மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.513/2013/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்–425 நாள்.19.12.2019. அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்-5**

சீர்காழி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளர்களை கொண்டு வீடுகள் தோறும் குப்பை பெறும் பணிக்காக 7மூன்று சக்கர வண்டிகள் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் LCV-3 மற்றும் BOV-16 வாகனங்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெறுகின்றன. இதன் காரணமாக பயன்படாமல் உள்ள மேற்கண்ட 7 மூன்று சக்கர வாகனங்களை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 23562/2019/P3 நாள்:30.11.2019 தேதிய உத்திரவில் தெரிவித்தவாறு இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் **Movable Asset Register** –ல் தேவையான பதிவுகளை மேற்கொள்ளவும் மேற்கண்ட 7 மூன்று சக்கர வண்டிகளை சென்னை மாநகராட்ச்சியிக்கு ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ-கு)1.மன்றம் அனுமதி வழங்களாம்

| | |
|---|---|
| | 2.அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அனுமதிக்கலாம். (ந.க.எண் 3836/2019/எச்1)<br>நகர்மன்ற தீர்மான எண்—426 நாள்.19.12.2019. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-6 | சீர்காழி நகராட்சி தூய்மை இந்தியா திட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகளை மக்களுக்கு எடுத்துரைகவும் அதன்பயன்பாடுகள் மக்களுக்கு சென்றடையும் வண்ணம் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண் 26458/2016/பி1 நாள் : 2.08.2017-ன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வழியாக IEC ACTIVITIES 2016-2017 – ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து சீர்காழி நகராட்சிக்கு ரூ.2,27,400/- வழங்கப்பட்டுள்ளது.மேற்படி தொகையின் செலவீனம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.<br>(அ - கு) மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் : 2120/2019/எச்1)<br>நகர்மன்ற தீர்மான எண்—427 நாள்.19.12.2019. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-7 | சீர்காழி நகராட்சி சுகாதாரப்பிரிவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக டெங்குகாய்ச்சல், சிக்கன்குன்யா , போன்ற நோய்கள் பரவாமல் முன்னெச்சரிக்கை தடப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.<br>இந்நிலையில் நகரில் வழக்கமாக துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு மிக குறைந்த அளவு மட்டுமே நிரந்தர துப்புரவு பணியாளர்கள் உள்ளதால் அப்பணியாளர்களை கொண்டு டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே தற்காலிக பணியாளர்களை தினக்கூலி விகிதத்தில் பணிக்கு பயன்படுத்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது மட்டுமே சாத்தியமானதாக உள்ளது.<br>எனவே மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்துள்ள தினக்கூலி விகிதத்தில் (Market Rate) நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ.310 என்ற விகிதத்தில் 15DBC பணியாளர்களை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் தொடர்ச்சியாக 1.1.2020 முதல் 31.3.2020 வரை 3 மாதங்களுக்கு பணிக்கு அமர்த்தி டெங்குகாய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.4,19,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ - கு) 1.மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2.பணியின் அவசரம் அவசியம் கருதி பணி செய்திட ஏதுவாக தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணிஆணை வழங்கவும்,பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந. க எண் : 2187/2019/எச்1)<br>நகர்மன்ற தீர்மான எண்—428 நாள்.19.12.2019. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-8 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பெறப்பட்டு நகர பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது நகர பகுதிகளில் விடுப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய் புதியதாக தற்போது பிள்ளையார் கோயில் தெரு, அல்முகமதியார் தெரு, இரணியன் நகர், ஈசானிய தெரு (TSR மில்) சந்து, கணபதி நகர், பெரிய வகுப்பு கட்டளை தெரு, பாப்பையா நகர், NGGO நகர் 3வது குறுக்கு தெரு, NGGO நகர் பிள்ளையார் கோவில் தெரு, எழில்மலர் பள்ளி (ஞானசம்மந்தர் தெரு), பாலாஜி நகர் மற்றும் தேசாதி கதிர்வேல் தெரு ஆகிய பகுதிகளில் அமைத்திட நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் அறிவுரையின் படியும், நகர பொது மக்களின் நலன் கருதியும் மற்றும் நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டும் பகிர்மான குழாய் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சத்தை இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்—73/2020/இ1)<br>நகர்மன்ற தீர்மான எண்—429 நாள்.19.12.2019. அனுமதிக்கப்படுகிறது. |

(ஒம்) முன்னிலை.திரு.S. வசந்தன்.B.E.MBA.

இடம்–சீர்காழி　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)
நாள்–19.12.2019　　　　　　　　　　/உண்மை நகல்/　　　　　　　　சீர்காழி நகராட்சி.

ஆணையர்(பொ),
சீர்காழி ந கராட்சி.